**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 06.11.2020 ((முற்பகல்)**

**முன்னிலை**

**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••••••

**வழக்கு எண்.SA 4055/E/2020**

திரு.மொ.பழனிச்சாமி ... மேல்முறையீட்டாளர்

/ எதிர் /

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
ஆத்தூர் வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 10.10.2019 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 14.11.2019 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 16.05.2020 |

******

**ஆணை**

தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்ட நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாததால் இன்று (06.11.2020) முற்பகலில் தொலைபேசி மூலம் தொடர்புக் கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மேல்முறையீட்டாளர் திரு.மொ.பழனிச்சாமி அவர்கள் தனது

சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான மனுவில் கைபேசி எண்ணை குறிப்பிடாததால், இவ்வாணையத்தால் அவரை தொலைபேசி மூலம் தொடர்புக் கொள்ள இயலவில்லை. பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு.தங்கமணி, பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், ஆத்தூர் வட்டம், திண்டுக்கல் மாவட்டம் அவர்கள் மட்டும் இன்றைய விசாரணையில் பங்கேற்றார்.

2. மேல்முறையீட்டாளர் 10.10.2019 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் 1951ல் இந்த புல எண்.523 பட்டா எண்.144ல் உள்ள சொத்து (விஸ்தீர்ணம்) யாருடைய பெயரில் உள்ளது என்ற விபரம், இந்த புல எண்.523 பட்டா எண்.144ல் உள்ள சொத்து (விஸ்தீர்ணம்) எவ்வளவு உள்ளது என்ற விபரம், 1959ல் இந்த புல எண்.523 பட்டா எண்.144ல் உள்ள சொத்து (விஸ்தீர்ணம்) யாருடைய பெயரில் உள்ளது மாறியிருந்தால் அதற்கான அ-பதிவேடு நகல் விபரம் மற்றும் அதற்கான பத்திர நகல், புல எண்.523 பட்டா எண்.144ல் ஒரு சதுரக்கிணறு உள்ளது அந்தக்கிணறு யாரால் வெட்டப்பட்டது கிணறு வெட்டப்பட்டதற்கான அ-பதிவேடு நகல், 1969 முதல் 1970 வரை இந்த சொத்து (விஸ்தீர்ணம்) யாருடைய பெயரில் உள்ளது என்பதற்கான அ-பதிவேடு நகல் மற்றும் முழு சொத்தின் வரைபட நகல், 1951 முதல் 1969 வரை இந்த புல எண்.523 பட்டா எண்.144ல் உள்ள முழு சொத்தின் (விஸ்தீர்ணம்) உரிமையாளர் யார் என்ற விபரம், எத்தனை நபர்கள் உள்ளன என்ற விபரம் உள்ளிட்ட 10 இனங்களில் தகவல்களைக் கோரி, பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட வருவாய் கோட்டாட்சியர், மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், திண்டுக்கல் மாவட்டம் என விலாசமிட்டு தாக்கல் செய்துள்ளார்.

3. மேல்முறையீட்டாளரின் மனுவானது 16.10.2019 மற்றும் 29.11.2019 ஆகிய தேதியிட்ட கடிதங்கள் வாயிலாகப் பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், ஆத்தூர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படாததால் மேல்முறையீட்டாளர் 14.11.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர் / மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம், திண்டுக்கல் மாவட்டம் அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். அதன்பிறகும் பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படாததால் பொது அதிகார அமைப்பினரால் தனக்கு முழுமையான தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்க உத்திரவிடுமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 16.05.2020 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (06.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இதுகுறித்து இன்றைய விசாரணையில் தொலைபேசியின் வாயிலாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலரிடம் வினவியபோது, மேல்முறையீட்டாளர் கோரியுள்ள தகவலை 7 தினங்களுக்குள் வழங்குவதாக தொலைபேசி வாயிலாக வாக்குமூலமாகத் தெரிவித்தார். பொதுத் தகவல் அலுவலரின் வாதுரையை ஆணையம் பதிவு செய்து, விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகின்றது:

**மேல்முறையீட்டாளர் 10.10.2019 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரிய தகவலை முறையாக**

மற்றும் முழுமையாக சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற 7 தினங்களுக்குள் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணம் ஏதுமின்றி ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் மேல்முறையீட்டாளருக்கு அனுப்பி, அதனை அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தை அறிக்கையாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலர் அவர்களுக்கு உத்திரவிடப்பட்டு, இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென ஆணையம் முடிவு செய்து இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகின்றது.

**ஒம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப்பதிவாளர்.**

**வழக்கு எண்.SA 4055/E/2020**

பெறுநர்

**பொது அதிகார அமைப்பு**
பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
ஆத்தூர் வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம்.

**மனுதாரர்**
திரு.மொ.பழனிச்சாமி,
த/பெ.மொட்டையாண்டி,
போடிகாமன்வாடி கிராமம்,
ஆத்தூர் வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம் - 624 708.

Copy to: Judgement File.
*““VP / PA -10.11.2020”*